Registered as a NewsPaper    பக்கங்கள் 04    விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம்: 03    திருவள்ளுவர் ஆண்டு 2023    சித்திரை 04    (16 - 04 - 1992)    வியாழக்கிழமை    ஓசை: 58

## உணவுச்சாலை விற்பனைப் பண்டங்கள் விலை நிர்ணயம்

உணவுச்சாலைகளில் விற்பனையாகும் உணவுப் பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கின்றது. உணவுப் பொருள்களின் விலையில் ஏற்பட்ட வீழ்ச்சியைத் தொடர்ந்து வட பிராந்திய வர்த்தகர் சங்கங்களின் சமாசம் இந்த நடவடிக்கையை எடுத்திருக்கிறது. தேநீர் ரூபா 2.00, பால்தேநீர் ரூபா 3 50, பால்கோப்பி ரூபா 4 00, உழுந்துவடை ரூபா 3.00, கடலைவடை ரூபா 3.00, சுசியம் ரூபா 3.00, வாய்ப்பன் ரூபா 2 00, இடியப்பம் ரூபா 1.00, தோசை ரூபா 1.50, இட்லி ரூபா 2 50, பருப்பு 3 00, மரக்கறிச் சாப்பாடு ரூபா 20.00, மீன் சாப்பாடு ரூபா 27.50 இவ்விலைப்பட்டியலுக்கு அமையவே உணவுப் பொருள்கள் விற்பனை செய்யப்படவேண்டும் என்றும் இப்பட்டியல் (4 ஆம் பக்கம் பார்க்க)

# சமாதான அணுகுமுறைக்கு கதவடைப்பு

# இராணுவப் பாதைக்கு முக்கியத்துவம்

## சிறிலங்கா அரசின் நிலைப்பாடு பற்றி விடுதலைப் புலிகள் இயக்கம் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

“அண்மைக்காலமாக போரா? சமாதானமா? என்றிருந்த ஒரு குழப்பமான அரசியல் நிலைமைக்கு சிறிலங்கா அரசு தனது செயல்கள் மூலம் இப்பொழுது தெளிவாக விடையளித்துக் கொண்டிருக்கின்றது. சமாதான முயற்சிக்குக் கதவை அடைத்து விட்டு போரைத் தொடர்ந்து நடத்தத் தேவையான முன்னெடுப்புக்களை அது பகிரங்கமாகவே செய்யத் தொடங்கியுள்ளது” இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகார பூர்வ ஏடான “விடுதலைப் புலிகள்” தெரிவித்துள்ளது.

மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது; கடந்த சில மாதங்களில் வெளிநாட்டுநல்லெண்ணத் தூதுக் குழுக்களும், சிறிலங்காவின் கத்தோலிக்ககிறிஸ்தவ மதபீடங்களும் உலகப்பத்திரிகையாளர் பலரும் யாழ்ப்பாணம் வந்து எமது பிரதிநிதிகளைச் சந்தித்துச் சென்றுள்ளனர். அவர்களிடம் சமாதானத்திற்கான எமது விருப்பத்தைத் தெரியப்படுத்தி அதற்கான பல முயற்சிகளையும் நாம் எடுத்து வருகிறோம் என்பதையும் சுட்டிக் காட்டியிருந்தோம்.

போரை நிறுத்திச் சமாதானத்தை ஏற்படுத்த யார் விரும்பினாலும் அவர்கள் யாழ்ப்பாணம் வந்து நிலைமையை நேரில் கண்டறிந்து எமது பிரதி நிதிகளையும் சந்தித்துச் செல்லலாம் எனப் பகிரங்கமாகவே நாங்கள் கருத்துத் தெரிவித்திருந்தோம். அத்துடன் சிறிலங்காவில் இருந்து வந்த கத்தோலிக்க ஆயர் குழுவின் விருப்பத்திற்கு இணங்க பௌத்த மதத் தலைவர்கள் உள்ளிட்ட ஒரு சர்வ மத பிரதி நிதிகள் குழுவையும் வரவேற்கவும் நாங்கள் தயாராக இருந்தோம். ஆனால் எமது நல்லெண்ணத்தைஎடுத்துச் சென்ற அப்பிரதிநிதிகளால் சிறிலங்காஅரசைச் சமாதானத்தின் பக்கம் கொண்டு வர முடியவில்லை.

பதிலாக “புலிகள் ஆயுதங்களைக் கீழே போடவேண்டும்” என்ற யதார்த்தத்திற்குப் புறம்பான வரட்டுத்தனமான பழைய கோரிக்கையினையே சிங்கள அரசியல் வாதிகளும் இராணுவ உயர் அதிகாரிகளும் மீண்டும் வலியுறுத்தத் தொடங்கியுள்ளனர்

புலிகளின் சமாதான சமிக்ஞைகளையும், வெளிநாட்டு நல்லெண்ணக் குழுக்களின் வேண்டுகோள்களையும் புறக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளைத் தடை செய்யுமாறு தமிழ்நாடு காங்கிரஸ் கோரிக்கை

(சென்னை)

விடுதலைப் புலிகளின் அமைப்பை தடைசெய்ய இந்திரா காங்கிரஸ் கட்சி இந்திய அரசைக் கேட்டுள்ளது.

திருப்பதி காங்கிரஸ் மகாநாட்டின் இரண்டாம் நாளான நேற்று, தமிழ் மாநிலத்தில் இந்திரா காங்கிரஸ் பிரிவு புலிகள் இயக்கத்தை இந்தியாவில் தடை செய்யக் கொண்டுவந்த கோரிக்கையை மகாநாடு ஏற்றுக் கொண்டிருக்கிறது.

ராஜீவ் காந்தியை கொன்றது புலிகள் என்பது நேரத்துடனேயே தெளிவானதொன்று என்று, இக் கொலையை நடத்தியவர்களை இந்தியா கொண்டு வந்து அரசு தண்டிக்க வேண்டு என்றும் இந்த மகாநாடு வேண்டுகோள் விடுத்தது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## மே2 முதல் 6 வரை தமிழிசை விழா

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் மே மாதம் 2ம் திகதி முதல் 6ம் திகதி வரை நல்லூர் ஆலய வீதியில் தமிழிசை விழா நடைபெறவுள்ளது. விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினர் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். நூற்றுக்கு மேற்பட்ட கலைஞர்கள் பங்குபற்றும் பிரமாண்டமான இத் தமிழிசை விழாவில் நாதஸ்வர, வயலின் செஞ்சிற் கச்சேரிகளும் நடைபெறவுள்ளன. தமிழீழத்தில் நடைபெறும் முதலாவது தமிழிசை விழா இதுவென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## தீர்வை முன்வைப்பது யார்? அரசா? விடுதலைப் புலிகளா?

(யாழ்ப்பாணம்)

“தமிழருக்கு அநீதி இழைத்தவர்கள் தான் உரிமை மறுத்தவர்கள்தான் தமிழருக்கு நீதியும் உரிமையும் வழங்க முன்வர வேண்டும். ஒரு தீர்வை ...

பட்டுள்ளது.

மேலும் “தமிழரின் இனப் பிரச்சினையை இழுத்தடிப்பதற்காக 1983 ஆம் ஆண்டின் இறுதியிலிருந்து கூட்டப்பட்ட ...

...வுக் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. தமிழரின் பிரச்சினையை ஆராய்ந்துதீர்வொன்றைக் கண்டு பிடிக்கும் நோக்கத்துடன் நியமிக்கப்பட்ட இக் ...

போராடிவரும் விடுதலைப் புலிகளிடம் ஒரு தீர்வுத் திட்டம் இல்லாமலில்லை. தமிழீழத் தனியரசுதான் அந்தத் தீர்வு. இந்தத் தீர்வைச் சிங் ...

## இடம் பெயர்வு

வவுனியாவில் இராணுவத்தினர் பெருமளவில் குவிக்கப்பட்டு தாக்குதல்கள் மேற்கொள்ளப்படலாம் என்ற பீதியில் மக்கள் இடம் பெயர்கின்றனர். மன்னார் வீதிக்கு சமீபமாக இருக்கும் பகுதிகளிலிருந்தும் நகருக்கு அண்மையில் ...

## அருட்திரு. சிங்காராயர்

## அருட்திரு. சிங்கராயர் பாலம் தலைவர் பதவி துறப்பு

(யாழ்ப்பணம்)

பாலம் பொதுப் பணி மன்றத்தின் தலைவர் பதவியிலிருந்து அருட்திரு. ஆபரணம் சிங்கராயர் அ.ம.தி. விலகியுள்ளார்.

கடந்த 23-12-91திகதியிட்டு அருட்திரு ஆபரணம் சிங்கராயர். அனுப்பி வைத்த பதவி விலகல் கடிதத்தை பாலம் பொதுமன்றம் பரிசீலித்தமையின் அடிப்படையில் அவரது பதவி விலகல் ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பதாக அறியவருகின்றது.

மேலும் 05-04-92-ல் பாலம் பொதுப்பணி மன்றம் அருட்திரு ஆபரணம்சிங்கராயருக்கு எழுதிய கடிதமொன்றில், அவரது பதவி விலகல் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டிருப்பதுடன் ஏழு அறிவுறுத்தல்களும் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது

யும் உரிமையும் வழங்க முன்வர வேண்டும். ஒரு தீர்வை முன்வைக்க வேண்டும்'' என விடுதலைப்புலிகளின் அதிகார பூர்வ ஏடான ''விடுதலைப் புலிகள்'' தனது ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவித்துள்ளது.

''தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்கு ஆளும் கட்சியோ எதிர்க்கட்சியோ இது வரையும் எந்தவித தீர்வுத்திட்டத்தையும்முன்வைப்பதற்குத் துணியவில்லை. அப்படி ஒரு தீர்வுத்திட்டத்தைமுன்மொழிவதும் அவர்களது நோக்கமல்ல'' எனவும் குறிப்பிடப்

இறுதியிலிருந்து கூட்டப்பட்ட சர்வகட்சி மாநாடு குழந்தைப் பராயத்திலேயே இறந்து போனது அதன் வாரிசாக 1989 இல், மீண்டும் மறுபிறவி எடுத்த இன்னுமொரு சர்வ கட்சி மாநாடு செயலிழந்து செத்துப் போகும் தறுவாயில் இருக்கின்றது. இந் நிலையில் இன்னுமொரு சர்வகட்சி கூட்டாக பாராளுமன்றத் தெரி

கத்துடன் நியமிக்கப்பட்ட இக் குழு தமிழர் தாயகத்திற்கு வருகை தந்து தமிழரின் நிலையை நேரில் கண்டறிய மறுக்கின்றது. கொழும்பிலிருந்து ஆராய்ச்சிநடத்திக்கொண்டிருக்கும் இந்தக் குழு விடுதலைப் புலிகளிடம் இருந்து தீர்வுத்திட்டம் ஒன்றை எழுத்தில் கேட்கிறது.

தமிழரின் உரிமைக்காகப்

தீர்வு. இந்தத் தீர்வைச் சிங்கள ஆளும் வர்க்கம் ஏற்றுக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

உள்ள கிராமங்களிலிருந்துமே மக்கள் பெருமளவில் இடம்பெயர்வதாக தெரியவருகின்றது.

# மண்டூரில் ஏழு தமிழர்கள் இராணுவத்தால் வெட்டிக் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் மண்டூர் பகுதியில் ஏழு தமிழ் மக்கள் இராணுவத்தினரால் வெட்டிக் கொல்லப்பட்டு உள்ளனர்.

மண்டூர் இராணுவ முகாமிலிருந்து ரோந்து வந்த இராணுவத்தினரே இக் கொடூரச் செயலில் ஈடுபட்டதாகவும், வெட்டிக் கொல்லப்பட்டவர்களில் ஐவர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தோர் எனவும் தெரியவருகிறது. தம்பிமுத்து சுப்பையாவும் (55 வயது) அவரது பிள்ளைகளான கோமளன் (25 வயது) சரோஜா (2ு வயது) சசிகலா (12வயது) ராஜேந்திரன் (22 வயது) ஆகியோரே கொல்லப்பட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்தோர் ஆவர். சீனித்தம்பி வள்ளிப்பிள்ளை (44 வயது) பொன்னையா கருணையம்மா (27 வயது) ஆகியோரே வெட்டிக் கொல்லப்பட்ட மற்றும் இருவருமாவார்.

இதேவேளை மட்டக்களப்பு பகுதியில் இராணுவத்தினரின் கொடூரச் செயல்கள் அதிகரித்து வருவதாகவும், கொல்லப்

(4ஆம் பக்கம் பார்க்க)

## மண்டூரில் புலிகள்தாக்குதல்

(மட்டக்களப்பு)

மண்டூர் இராணுவ முகாமிலிருந்து, மண்டூர் துறைப்பகுதியினை நோக்கி நேற்று முன்தினம் மாலை அணியாகச் சென்ற சமூகவிரோதக் கும்பலொன்றின் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்திய

(4ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறை, மகரகம குண்டு சிறி.சு.க அமைப்பாளர்கைது

அம்பாறை மற்றும் மகரகம பகுதிகளில் நடந்த குண்டு வெடிப்புக்கள், புத்தாண்டுக் காலத்தில் அமைதியைக் குழப்பும் நோக்கமுடைய சக்திகளோடு சேர்ந்து விடுதலைப் புலிகள் மேற்கொண்ட நடவடிக்கை என்றும் இதற்கானஉத்தரவு புலிகளின் மட்டக்களப்பு பிரதேச செயலகத்திலிருந்து கருணா என்பவரால் விடுக்கப்பட்டது என்றும் பூர்வாங்கவிசாரணைகளில் இருந்து தெரிய வருவதாக பொலிசார் கூறியுள்ளனர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 'ஐலண்ட்' பத்திரிகையாளரை பொலிசார் மிரட்டினராம்

பிரேமதாசா உடுகம்பொலவின் அறிக்கையைப் பிரகரித்ததற்காக அரசு பொலிசாரை அனுப்பி தமது பத்திரிகையாளரை மிரட்டியதாக 'ஐலண்ட்' பத்திரிகை அரசைக் குற்றம் சாட்டியுள்ளது.

இதேவேளை உடுகம்பொலவின் குற்றச்சாட்டினால் அரசு கலங்கிப் போயிருப்பதாகவும் லங்கா சமசமாஜக் கட்சி கூறியுள்ளது.

## வீரச்சாவு நவீனன்



18-7-91 கட்டைக்காடு இராணுவ முகாமிலிருந்து ஆகாயக் கடல் வெளி தாக்குதலோடுவெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் எம்மவரான வீர வேங்கை நவீனன் (திருலோகசிங்கம் அன்பழகன், கனக சபைத் தோட்டம், கீரிமலை வீதி, காங்கேசன் துறை தற்போது 5 ஆம் கட்டை கட்டுடை, மானிப்பாய்) வீரச்சாவு அடைந்தார். இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

# ஆப்கான் கிளர்ச்சிக்காரரிடம் முக்கிய விமான தளம் வீழ்ச்சி

(காபூல்)

ஆப்கானிஸ்தான் தலைநகரம் காபூலிருந்து முப்பது மைல் தொலைவிலிருக்கும் பல்வான் விமான நிலையத்தை ஆப்கான் கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றியுள்ளனர். எனினும்ஜமாய்த்தேஇஸ்லாமியஅமைப்பு, அரசபடைகளிலிருந்து விலகியவர்கள், இஸ்லாமிய அமைப்பு ஆகியவை தனித்தனியே இவ் விமான நிலையம் தத்தமது கட்டுப்பாட்டிலிருப்பதாக கூறுவதைப்பற்றி முரண்பாடான செய்திகள் வந்து கொண்டுள்ளன.

இதேவேளை ஆப்கன் அரசுத் தலைவர் நஜீபுல்லா சிரேட்ட இராணுவத் தலைவர்களுடன் காபூலில் அவசர ஆலோசனைக் கூட்டமொ

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறைக் குண்டு ஐம்பது கிலோ நிறையாம்

அம்பாறையில் வெடித்த குண்டு 50கிலோசக்திவாய்ந்ததென்றும், மஹரகம குண்டு வெடிப்புச் சம்பவத்தில் 30 கிலோ சக்தி வாய்ந்த குண்டும் பயன் படுத்தப் பட்டது என்றும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கப் படுகின்றன.

இந்தக் குண்டுகள் களுவாஞ்சிக்குடியில் பொருத்தி அமைக்கப்பட்டன என்று புலனாய்வுப் பிரிவைமேற்கோள்காட்டி அரசு தரப்பில் சொல்லப்படுகிறது.

## இராணுவம்தேடுதல்வேட்டை 10 தமிழர் கைது; பலர் சித்திரவதை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடிப் பகுதியில் இராணுவத்தினரின் தேடுதல் வேட்டை கடந்த நான்கு நாட்களாக தீவிரமடைந்துள்ளதாகத் தெரியவருகிறது. கடந்த சனிக்கிழமை காலையில் மட்டக்களப்பின் பல்வேறு இராணுவ முகாம்களில் இருந்தும் ஆயிரக்கணக்கில் வெளியேறிய இரா

(4ஆம் பக்கம் பார்க்க)

க.பொ.த சாதாரணதரம்
O/L
பகல்முழுநேரவகுப்பு
யுனிவேர்சல்
கந்தர்மடம் — யாழ்ப்பாணம்.
(சி/4268)

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

அரியாலை மேற்கைச் சேர்ந்த ச. சங்கரநாதன் என்பவரின் அடையாள அட்டையும், சில ஆவணங்கள் அடங்கிய பேர்சும் இரணைமடுச் சந்திக்கும், முறிகண்டிக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 6/1 கலைமகள் வீதி, அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அல்லது ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (2463)

ஓமந்தை, தடை முகாமில் 12-04-1992 இரவு சாம்பல்நிற சில்லுப்பூட்டிய Bag, ஆஸ்பத்திரி அவசர சிகிச்சை, ஊசி மருந்து, உடுப்புக்கள், போட்டோ அல்பம் உட்பட தவறிவிட்டது. எடுத்தவர்கள் காருண்ணியத்துடன் தந்துதவுமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன். சன்மானம் வழங்கப்படும். திருமதி ஞா.இராசதுரை 63/1 செட்டித்தெரு, நல்லூர். (2465)

*ENGLISH EXAMINATIONS*

*G.A Q(External)GELT, O/L A/L* உட்பட சகல சோதனைகளுக்கும் *English Grammar Spoken English* கற்பிக்கப்படுகிறது *V.N.Kandasamy A.I.B. Part I (London) Inter (London)* 87, திருநெல்வேலி றோட் (பாலத்திற்கு அண்மையில்) கொக்குவில். (2470)

### காணவில்லை

திருமதி சுந்தரம் கனகம்மா என்பவரைக் காணவில்லை. இவர் கடைசியாக வெள்ளை நிறச்சேலை அணிந்திருந்தார். வயது 82. இவரைக் கண்டவர்கள் கீழ்காணும் விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும். இரத்தினசிங்கம் 529, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (2464)

## மலேரியாவை கட்டுப் படுத்த நடவடிக்கை

வடமராட்சி கிழக்கில் பரவி வரும் 'மலேரியா' காய்ச்சலினைக் கட்டுப்படுத்த அப்பகுதியில் அமைக்கப் பட்டுள்ள சுமார் ஆயிரம் இடம் பெயர்ந்தவர்களின் தற்காலிக வதிவிட குடிசைகளுக்கு 'மலத்தியோன்' தெளிக்கப்பட்டு வருகின்றது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின்அனுசரணையுடன், யாழ். செஞ்சிலுவைச் சங்க கிளையினால்செம்பியன்பற்று, தாழையடி, நாகர்கோவில், குடத்தனை, பொற்பதி, மாமுனை ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளதற்காலிக வதிவிட குடிசைகளுக்கே 'மலத்தியோன்' தெளிப்பதற்

யாழ்ப்பாணம்
பல்கலைக்கழகம்
இலங்கை

## கற்கைநெறி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 1991/92 கல்வியாண்டிற்கு பின்வரும் கற்கை நெறிகளுக்கு வெளிநிலைத் தேர்வு நாடியாக பதிவு செய்ய விருப்புடைய தகைமை பெற்றவர்களிடம் இருந்து 1992 யூன் 6 ஆம் திகதிவரை விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்படும்.

1. வர்த்தக முதற் கற்கைநெறி
2. கலை முதற் கற்கை நெறி
3. பொதுக் கலைமாணி பகுதி 1
4. சிறப்புக் கலைமாணி பகுதி 1
5. வர்த்தகமாணி பகுதி 1

பின்வரும் பாடங்களில் மாத்திரம் சிறப்புக்கலைமாணி கற்கைநெறிக்குப் பதிவு செய்து கொள்ளலாம். (இந்து நாகரிகம், வரலாறு, புவியியல், பொருளியல், மெய்யியல், அரசறிவியல், தமிழ், நுண்கலை, நாடகமும் அரங்கியலும், சமஸ்கிருதம், கிறிஸ்தவ நாகரிகம்.)

விண்ணப்பப் படிவங்களும் உரிய விபரங்களும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வெளி நிலைப் பதிவு தேர்வு அலுவலகத்தில் இருந்து நேரடியாகவோ தபால் மூலமாகவோ 1992 ஏப்ரல் 20-ம் திகதி தொடக்கம் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பப் படிவத்தையும் பாடத்திட்டத்தின் பிரதியையும் நேரடியாக பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சிறாப்பரிடம் 50/- ரூபா செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும். தபால் மூலம் விண்ணப்பப் படிவத்தையும் பாடத்திட்டத்தின் பிரதியையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப்

# வங்குரோத்து நிலையை இலங்கை வங்கி எட்டவில்லை

### -யாழ். இலங்கை வங்கி கிளைமுகாமையாளர்

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பெரியளவில் பங்காற்றி வரும் இலங்கை வங்கி அரச வங்கியாக இருப்பதால் பலரின் விமர்சனத்திற்குள்ளாகியுள்ளது. இதில் ஐம்பது வீதத்திற்குமேல் அரசு முதலீடு செய்துள்ளது. இலாபத்தை நோக்கமாகக் கொள்ளாது சேவை மனப்பான்மையுடனும் அபிவிருத்தி நோக்குடனும் செயற்பட்டு வருகிறது. இந்த நிலையில் இலங்கை வங்கி வங்குரோத்து நிலையை அடைந்துள்ளது என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது என இலங்கைவங்கியின் யாழ். பிரதான கிளை பிரதம முகாமையாளர் திருமதி துரைராசா தெரிவித்தார்.

புதுவருட தினத்தை முன்னிட்டு கடந்த திங்கட்கிழமை காலை8மணிக்குநாள்வேலைக்காகவும் கைவிசேஷத்திற்காகவும் மேற்படி வங்கி திறக்கப்பட்டது. இந்நிகழ்வின் போது தலைமையுரை நிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நூற்றுக்கணக்கான வாடிக்கையாளர்களும், முகாமையாளர்களும், நலன் விரும்பிகளும் கலந்துகொண்ட இவ்விழாவில் முகாமையாளர்கள் குத்து விளக்கை ஏற்றிவைக்க வங்கி ஊழியர் சுதாகரனின் இறைவணக்கத்துடன் நிகழ்வு ஆரம்பமானது.


இந்நிகழ்ச்சியில் உரையாற்றிய வங்கிச்சட்ட ஆலோசகர் திரு. சி. கனகரட்ணம் இலங்கைவங்கி ஒரு ஸ்திரமான நிலையிலேயே தொடர்ந்து இருந்து வருகிறது. இது எந்த சந்தர்ப்பத்திலும் ஒரு நிதி நெருக்கடியையும் எதிர் நோக்கியதில்லை.

1990 ஆம் ஆண்டு மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையிலிருந்து இலங்கை வங்கியின் உண்மையான நிதி நிலையை அறிந்து கொள்ளலாம்.

1984 ஆம் ஆண்டின் பின் பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட பெருந்தொகையான வங்கிக்கடன்கள், வங்கி மேலதிகப் பற்றுக்கள் மீளப்பெற முடியாத நிலை காணப்படுகிறது. இவற்றை மீள வழங்குவோருக்கு வங்கி விசேட சலுகைகளை வழங்க தீர்மானித்துள்ளது. இவ்வாறான நிலைமையினைக்கருத்தில் கொண்டு வங்கி வங்குரோத்துநிலையை அடைந்துள்ளது என்று கூறுவது அர்த்தமற்றது என்றார். (ச)

## 31-ம் நாள் நினைவஞ்சலி

### அந்தியேட்டி அழைப்பு

| தாயின் மடியில் | | தாயக மண்ணில் |
|---|---|---|
| 26 | | 17 |
| — | | — |
| 07 |  | 03 |
| — | | — |
| 1972 | | 1992 |

### 2 ஆம் லெப். இராசன்
(வல்லிபுரம் - கேமராசா)

தமிழீழத் தாயின் துயர் துடைக்க
தீரமுடன் போராடும்
வீரவேங்கையாக - உன்னை
கோவையூர் தந்து விட
வீறு கொண்டு சென்றாயே!
பாரம் பரியமாய் விளங்கிய
மணலாறு என்னும் தமிழ்
பிரதேசத்திலே அன்னியனின்
படையெடுப்பை சிதறடித்து
வீர காவியம் படைத்து விட்ட
காவிய நாயகனே - இராசன்

## இந்து இளைஞர் பேரவை கொடிதினம்

யாழ்.மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் வருடாந்தக் கொடி தினம் மே மாதம் 15 ஆம் திகதி யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவையினால் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் பேரவைத் தலைவர் திரு. வே.கெ. தனபாலன் தலைமையில் காலை ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

வேலை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் தவத்திரு சோமசுந்தரதம்பிரான் சுவாமிகள் முதலாவது கொடியை விற்பனை செய்து கொடி தினத்தை ஆரம்பித்து வைப்பார்.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சகல இந்து இளைஞர் மன்றங்களும் இக் கொடி தினத்திற்குப் பூரண ஒத்துழைப்பு நல்குமாறு யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் பொதுச்செயலாளர் திரு. சி. சி. வரதராசா வேண்டுகோள்விடுத்துள்ளார். [24]

## தொழிலிழந்தோர் விண்ணப்பிக்க வேண்டுகோள்

ஈராக், குவைத் யுத்தத்தின் போது தொழிலிழந்து நாடு திரும்பியவர்களுக்கான நஷ்டஈட்டுத் தொகைக்கு மீள விண்ணப்பிக்குமாறு யாழ். அரசாங்க அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார்

மேற்படி நாடுகளில் இருந்து 2-8-90 ற்கும் 2-3-91 இற்கும் இடையில் விலகி இங்கு வந்

## பூபதிக்கோள்



வல்லரசொன்று
வரலாற்றுப் பாதையில்
வழி தவறிப்போனது.

காக்கி உடைகளும்
கவச வாகனங்களும்
பிளந்த வாய் மூடாத
பீரங்கிக் குழாய்களும்
அமைதித் தோழனின்
மெய்க்காவலராய்
தாயக மண்ணில்
கால்பதித்து வைத்தன.

ஆதிக்கச் சவ்வுகள்
மூடி மறைத்ததில்
விழிகள் இழந்த
இந்திய அரசு
இருட்டினில் நடந்தது

எங்கள் நாட்டில்
பிணங்கள் மீதொரு
பாதை அமைந்தது
பாதை நெடுகவே
உடல்கள் உருண்டதில்
அசோகச் சக்கரம்
அசைய மறுத்தது.

பாரதக் கொடி
பறந்து கொண்டிருக்க
உச்சிக்கம்பத்தில்
உரிமை கேட்ட
ஈழத்தமிழரின்
சதைகள் கொத்திய
கழுகுகள் இருந்து
அலகுகள் சொறிந்தன.

மண்ணினைக் காத்த
மனித உயிர்களின்
கரைசல் விட்டதால்
இந்தப் பூமியில்
ஆதிக்கச் சவ்வுகள்
கரைந்து அழிந்தன.

விழி திறந்ததும்
வடக்கு நோக்கி
வல்லரசு போனது

சுதந்திர நாடுகள்
மனித உரிமையின்
மகத்துவம் பற்றியும்
பெண்விடுதலையின்
பெருமை பற்றியும்
பேசிக் கொள்கையில்
அங்கீகரிக்கப்படாத
என் தேசமோ.

பூபதி என்ற
புதிய கோளினை
தியாகச்சுடராய்
திரண்டெழச் செய்தது.

ஏனைய கோள்கள்
வழமை போல் இருக்க
பூபதிக் கோளோ
கண்ணுக்குத் தெரியாது
கதிர்களின் வீச்சால்
அநீதியை எல்லாம்
அழித்துச் செல்லும்.

புதைக்கப்பட்ட இவள்
புதைமேடம் பானது
பூகம்பக்கூட்டத்தின்
தலைமையை ஏற்று
பூமிக்குள்ளே
புதிய பாதையை
வகுத்துக் கொள்ளும்.

முகர்ந்துபிடிக்கும்
பூகம்ப மூச்சில்
அடக்கு முறைகளின்
இருப்பிடங்களில்
நிச்சயம் ஒரு
நிலநடுக்கம் வரும்.

முடிவில்
உலக விடுதலைக்
கொடியை ஏற்ற
பூபதிக் கோளை
பூமிக்கு வரும்படி
நாடுகள் சேர்ந்தொரு
அழைப்பு விடுக்கும்

அப்போ
பூகம்பமெல்லாம்
பூமியைச்சுமக்கும்
பூக்களாய் மாறி
வாழ்த்தினைக் கூறட்டும்!

-விடிவெள்ளி

## நினைவு கூருகின்றோம்

## 1992-04-16

வதிவிட குடிசைகளுக்கே 'மலத்தியோன்' தெளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத் தற்காலிக வதிவிட குடிசைகளில் வெற்றிலைக்கேணி இராணுவ நடவடிக்கையினால் இடம் பெயர்ந்தவர்களும், ஆனையிறவு, திருமலை, பலாலி, காங்கேசன்துறை, மயிலிட்டி ஆகிய இடங்களில் இருந்து இடம் பெயர்ந்துவந்த மக்களும் தங்கியுள்ளார்கள்.

[36]

## இராஜகோபுர மஹா கும்பாபிஷேகம்

யாழ். வண் - வடமேற்கு கேசாவில் முத்து விநாயகர் தேவஸ்தான இராஜகோபுர மஹா கும்பாபிஷேகம் இந்த மாதம் 20 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணியிலிருந்து 10 மணி வரை நடைபெறும். (21)

பிரதியையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நிதியாளருக்கு எழுதப்பட்ட காசுக்கட்டளை / தபாற் கட்டளையுடன் சுய முகவரியிட்டு ரூபா 12/- பெறுமதியுடைய முத்திரையொட்டப்பட்ட 28 x 20 செ. மீ அளவுடைய தபால் உறையினையும் அனுப்புதல் வேண்டும்.

1990 / 91 கல்வியாண்டிற்காக ஏற்கனவே பதிவு செய்துள்ளோருக்கு இவ்வறிவித்தல் ஏற்புடையதல்ல.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

07.04 1992

(சி/4267)

வீர காவியம் படைத்து விட்ட
காவிய நாயகனே - இரசன்
உன் பாத சுவடுகளில்
எங்கள் பாதம் தொடர்ந்துவிடும்
நீ கண்ட கனவு ஓர் நாள்
நிச்சயமாய் ! பலித்துவிடும்.

2 ஆம் லெப். இராசன் (வல்லிபுரம் வேமராசா) அவர்களின் 31 ஆம் நாள் நினைவஞ்சலியை நினைவு கூருகின்றோம். இவரது ஈமக்கிரியைகளில் கலந்து கொண்ட அனைவரையும் அந்தியேட்டியிலும் இன்று 16.4.1992 கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இராஜ வீதி,
கோப்பாய் மத்தி,
கோப்பாய்,

பாபு, கண்ணன்.

(2471)

2-8-90ற்கும் 2-3-91 இற்கும் இடையில் விலகி இந்த வந்தோர் கடந்த வருடம் நஷ்ட ஈடு பெறுவதற்காக யாழ். செயலகத்திற்கு விண்ணப்பித்திருந்தது தெரிந்ததே.

தற்போது கொழும்பிலிருந்து புதிய விண்ணப்பப்படிவம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதால் இவர்கள் மீண்டும் புதிதாக விண்ணப்பிக்க வேண்டும்.

இதற்காக இதுவரை விண்ணப்பித்த அனைவரும் மீண்டும் மே மாதம் 20 ஆம் திகதிக்குப் பின் செயலகத்தால் வழங்கப்படும் படிவத்தினைப் பெற்று விண்ணப்பிக்குமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

## உடுகம் பொலவை கைதுசெய்ய உத்தரவு

(கொழும்பு)

தலைமறைவாக வாழ்ந்து வரும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரேமதாஸா உடுகம் பொலவை அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்வதற்குப் பொலிசார் உசார் நிலையில் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தைச் சேர்ந்தபல குழுக்கள் இவரைத் தேடிக் கண்டு பிடிப்பதற்கு ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்று பொலிஸ் வட்டாரங்களைமேற்கோள்காட்டி லங்கா புவத் தெரிவிக்கிறது.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் உடுகம்பொல கைது செய்யப்பட்டால், சட்டமா அதிபர் மாத்திரம்தான் பிணைக்கான மனுவை அனுமதிக்கலாம். உடுகம்பொல ஏப்ரல் 6, 9 ஆம் திகதிகளில் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. அதனால் ஏப்ரல் 27 ஆம் திகதி உடுகம்பொலவை நீதிமன்றத்தில் ஆஜராகும்படி நீதிபதி பணித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## 1992-04-16

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ்ப்பாணத்தில் எதிர்பாராத விதமாக கைக்குண்டு வெடித்ததில் எம்மைப் பிரிந்த-

**அன்பு** (செ. தனபாலசிங்கம் - முள்ளியான் வெற்றிலைக்கேணி)

1986 ஆம் ஆண்டு நாவற்குழியில் சிறிலங்காப்படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

**முரளி கமல்** (நமசிவாயம் கமலநாதன்- கமலநாதன்வீதி, நுணாவில் மேற்கு)

பருத்தித்துறையில் காவற்கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் போது சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய

**புவி, பொட்ஸ்** (சேதுநாயகம் ரவீந்திரராசா - புலோலி கிழக்கு, பருத்தித்துறை)

1988 ஆம் ஆண்டு மன்னார், வெள்ளாங்குளம் பகுதியில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய-

**லெப். முரளி** (மரியதாஸ் அன்புமணி- உயிலங்குளம், மன்னார்)

**லெப். தான்பரீன்** (சின்னையா ஜெயக்குமார் -கிராஞ்சி, பூநகரி, மன்னார்)

1989 ஆம் ஆண்டு கொழும்பில் ஜே.வி.பி. குழுவினர் மேற்கொண்ட குண்டுவீச்சில் கொல்லப்பட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ் இளைஞன்.

1991 ஆம் ஆண்டு மன்னார்/ அடம்பன், ஆட்காட்டி வெளிப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய-

**2ஆம் லெப். ரைகன்** (சின்னத்தம்பி விமலேஸ்வரன் -சித்தாண்டி, முறக்கொட்டாஞ்சேனை மட்டக்களப்பு)

**இளங்கோ** (மகோகராஜ் தம்பிஐயா - விவேகானந்தநகர், புதுக்குடியிருப்பு, வாழைச்சேனை மட்டக்களப்பு)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**விடுதலைப் புலிகள்**
**மக்கள் முன்னணி**

(சி/4265)

## 31-ம் நாள் அந்தியேட்டி தினம்



16-04-92

### 2-ம் லெப்டினன் ஆண்டகை

(சி. சுரேஸ்குமார்)

துள்ளி விளையாடும் பருவத்திலே துணிவுடன்
இணைந்தாய்
புலியுடன் அன்னியப்படையை அழித்து அள்ளி எடுத்தாய்
ஆயுதக் குவியலை ஆறு மாதங்கள் போராட்டத்தில்
அழியாத
புகழுடன் அடைந்தாய் வீர சொர்க்கம் - ஈழத்தமிழ்
மண்ணுக்கு நீர் அளித்த தியாகம் என்றென்றும்
ஒளியுடன் விளங்கும் எம் செல்வமே!

6-ம் வட்டாரம்
கும்புறுபிட்டி

உன் பிரிவால் வாடும்
பெற்றோர், சகோதர, சகோதரிகள்,
உற்றார், உறவினர்கள்.

(சி-4259)

## ஓராண்டு நினைவு அஞ்சலி

| தாயின் மடியில் | | தாயக மண்ணில் |
|---|---|---|
| 28 — 01 — 1975 |  | 28 — 04 — 1991 |

ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்துடன் நேரடி மோதலில் வீரச்சாவடைந்த -

### வீரவேங்கை
### 2-ம் லெப்டினன் விசுவாசம்
(பொன்னுத்துரை சுதாகரன்)

எண்ணினில் ஆண்டது சென்று மறைந்தது - அன்று
உன்னுடல் சாய்ந்தது தமிழ் மண்ணை மீட்டெடுக்க
உன் உயிரையே அர்ப்பணித்தாய் தமிழீழம்
மலர்ந்திடவே நீ பண்ணிய விடுதலை பாதியிலே நிற்க
விண்ணகம் சென்றதேன் 'விசுவாசமே'
மண்ணினில் தமிழீழம் மானம் காத்திட
அருள் கொடு எழில் 'விசுவாசமே'

தேறிடும்

இல,81
2 ஆம் யூனிற்,
வவுனிகுளம்.

அப்பா, அம்மா, அண்ணா,
அக்காமார், அத்தான்மார்,
மருமக்கள்மார், உற்றார்,
உறவினர்கள்.

(2440)

## சிந்தனைக்கு

அநீதியை தாங்குபவனை விட
அநீதி இழைப்பவனே,
என்றும் அதிக அவதியுறுவான்.

— பிளேட்டோ


# ஈழநாதம்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 16-04-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2308
த பெ எண் ...


## கல்விக்குத் தடை துரோகமான செயல்

இந்திய அரசு திபெத்திய அகதிகளுக்கும், வங்காள அகதிகளுக்கும், பாலஸ்தீன அகதிகளுக்கும், ஆப்கானிஸ்தான் அகதிகளுக்கும் தேவையான வசதிகளைச் செய்து கொடுத்திருக்கும்போது இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு மட்டும் கல்வியை மறுப்பது மனிதநேயமற்ற செயலாகும் எனத் தமிழகத்திலுள்ள அறிஞர்கள் சிலர் அரசைக் கண்டனம் செய்துள்ளனர்.

ஒரு நாட்டிலிருந்து அகதிகளாக வந்துள்ளவர்களுக்கு உணவு, உடை, உறைவிடம், தங்குமிடம், மருத்துவம், கல்வி என்பனவற்றை வழங்க வேண்டும் என்பது சர்வதேச நியமமும், மனித நேயமுடையவர்களின் செயலுமாகும். ஆனால், இந்தியவில் குறிப்பாகத் தமிழகத்தில் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கான சகல வசதிகளையும் நிறுத்தி விட செல்வி ஜெயலலிதா தலைமையிலான அரசாங்கம் தீவிரமாக முயற்சித்து வருகின்றது.

தமிழகத்தில் இருந்து இலங்கைத் தமிழ் அகதிகள் சர்வதேச நியமங்களுக்கு முரணாக வலுக்கட்டாயமாகத் திருப்பி அனுப்பப்படுவதாகவும், இலங்கை திரும்ப நிர்ப்பந்திக்கப்படுவதாகவும் அகதிகளுக்கான ஐ நா. உயர்ஸ்தானிகராலயம் உட்பட உலக மனிதநேய ஸ்தாபனங்களும் கண்டனம் செய்துள்ளன. ஆனால், இந்திய மத்திய அரசோ, அன்றித் தமிழக அரசோ இதில் அக்கறை காட்டுவதாக இல்லை. அதேவேளை வெளியேற்றும் நடவடிக்கைகளைத் தீவிரமாக்கும் நடவடிக்கைகளில் தமிழக அரசு இறங்கியுள்ளது.

இதற்கான ஒரு நடவடிக்கையே தமிழகத்தில் இலங்கைத் தமிழ் அகதிகளின் கல்விக்கு மேற்கொள்ளப்பட்டுள்ள கதவடைப்பாகும். இக்கதவடைப்பு கடந்த வருடமே ஆரம்பிக்கப்பட்டு விட்டதாயினும் இம்மாதத் தொடக்கத்திலேயே சட்டபூர்வமாக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் அகதிமுகாம்களிலும் வெளியிலுமாக வாழும் இரண்டு லட்சம் மக்களில் உள்ள மாணவர்களின கல்வி பாலர் வகுப்பில் இருந்து பல்கலைக்கழகங்கள் வரை பாதிப்படைந்துள்ளது.

இலங்கைத் தமிழர்கள் 1983 ஆம் ஆண்டிற்கு முன்னரே தமிழகத்திலும், இந்தியாவின் ஏனைய பகுதிகளிலும் கல்வி கற்று வந்தனராயினும் 1983 இனக்கலவரத்துடன் லட்சக் கணக்கில் அகதிகள் சென்றபோது அவர்களுக்குரிய கல்வி வசதியை ஏற்படுத்திக் கொடுக்குமாறு அப்போதைய இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி தமிழக அரசிற்கு உத்தரவிட்டார். அப்போதைய தமிழக முதல்வர் எம். ஜி. ராமச்சந்திரனும் அமுலபடுத்

# இராணுவ அமைப்பு ரீதியான மாற்றம் குழு வாதத்தை தோற்றுவிக்கக் கூடும்

றோகான் குணசேகரா

சர்ச்சைக்குரிய வகையில் பாதுகாப்பு படைகளின் கட்டளையிடும் மற்றும் கட்டுப்படுத்தும் அமைப்புகளில் செய்யப்பட்ட மாற்றமானது ஈழப போராட்டம் தொடர்பாக இராணுவ வட்டாரங்களில் கருத்து வேறுபாடுகள் இருப்பதை முதல் தடவையாகப் பகிரங்கப்படுத்தியுள்ளது எனலாம். இந்த மாற்றத்தின் கீழே இதுவரை கூட்டுப் படைத் தலைமையகத்தின் பொறுபிலிருந்த திட்டமிடுதல் மற்றும் நிறைவேற்றுதல்கள் முப்படைத்தளபதிகளிடம் விடப்பட்டுள்ளது. அதாவது விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை திட்டமிடவும் நிறைவேற்றவும் முப்படைத் தளபதிகளுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

புதிய மாற்றங்கள் பற்றிய வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்ட பினனர் கூட்டுப் படைத் தலைமையகத்தின் கீழ் இயங்கும் கூட்டு நடவடிக்கை கவுன்சில் கடந்த புதனன்று கூடி முப்படைத் தளபதிகள் மற்றும் கூட்டுப் படைத் தளபதிகளில் கடமைகளில் இருக்கும் பொறுப்புகள் பற்றி விவாதிக்கப்பட்டது. இக் கவுன்சிலுக்கு ஜனாதிபதி ஆர் பிரேமதாசா தலைமை தாங்கினார். பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் செயலாளர், கூட்டு நடவடிக்கைகளின் கட்டளையிடும் அதிகாரி முப்படைத்தளபதிகள், பொலிஸ்மா அதிபர், தேசிய புலனாய்வு பணியகத்தின் டைரக்டர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அநுராதபுரம், வவுனியா, அல்லது திருக்கோணமலை போன்ற போர் நடவடிக்கைகள் நடைபெறும் பகுதிகளுக்கு அண்மையாக பாதுகாப்புப் படைகளின் தலைமையகம அமைக்கப்பட வேண்டும் என்பது பாதுகாப்பு படையினரிடையே ஏற்பட்டுள்ள புதிய சிந்தனையாகும். விடுதலைப் புலிகளுக்கு எதிரான பாதுகாப்பு படைகளின் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க கூட்டுப் படைத்தலைமையகத்தால் நேரடியாகக் கட்டுப்படுத்தும் முறைக்கு மாற்றாக முப்படைத்தளபதிகளுமே நேரடிப்பொறுப்பை ஏற்றுள்ளனர். கூட்டுப்படைத் தலைமையகத்தில் பணியாற்றிய படைத்துறை அதிகாரிகள் பலரும் இராணுவத் தலைமையகத்திற்கு மாற்றப்பட்டுள்ளனர். களத்தில் நிற்கும் அதிகாரிகளின் வசதிக்கேற்ப காலப்போக்கில் மேலும் சில மாற்றங்கள் கொண்டுவரப்படலாம்.

### பிரதான பங்கு

தினால் மேற்கொள்ளப்பட்டு வந்தது. ஈழப்போராட்டத்தின் ஆரம்பம் முதலே இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட படைப்பிரதிநிதியினரை இணைக்கும் விடயம் நெருக்கடி மிக்கதாகவும், ஒரு படையணியின் பிரசன்னம் இல்லாதவிடத்து பலத்த இழப்புக்களை சந்திக்க வேண்டியதாகவும் அமைந்து விடுகின்றது.

கூட்டுப்படைத் தலைமையகம் அமைக்கப்பட முன்பு விசேட சேவைகளுக்கான நடவடிக்கைத்தலைமையகம்(JOSSOP) வவுனியாவில் குறிப்பிட்டதொரு எல்லைக்குள் மட்டும் செயற்பட்டு வந்தது. 1985-ம் ஆண்டில் கூட்டுப்படைத்தலைமையகம் அமைக்கப்பட்டு ஜெனரல் திஸ்ஸ வீரதுங்க அதன் தலைவராக நியமனம் பெற்றார். அதன் பின்னர் இப்போது பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக சிறில்ரணதுங்க தலைமையேற்றிருந்தார்.

சிறில்ரணதுங்க இளைப்பாறியதையடுத்து முப்படைத்தளபதிகளும் கூட்டுப்படைத்தலைமையகத்தை எதிர்பார்க்கும் நிலையிலிருந்து விடுபட்டனர். அதன் பின்னர் பாதுகாப்பு அமைச்சின் கூட்டு நடவடிக்கை தலைமையகம்(OPS HQMOD) கட்டளையிடும்தனது பணியை இழந்து ஒருங்கிணைக்கும் கடமையை மட்டும் ஆயுதப்படைகளின் டைரக்டர்களினூடாக செயற்படுத்தி வந்தது.

கடந்த யூன் 1990-ல் புலிகளுக்கும் அரசுக்குமிடையே போர் மூண்டபோது (OPS HQMOD) யே சகல நடவடிக்கைகளுக்குமான இறுதித் தீர்மானம் எடுக்கும் பொறுப்பில் இருந்தது இதே நிலைமைதான் கடந்த நவம்பர் வரை நீடித்து வந்தது இக்காலப் பகுதியில் பாதுகாப்பு படையினர் பெரும் எடுப்பிலான நடவடிக்கைகளைச் சந்தித்து இருந்தனர். இப்போது கூட்டுப்படைத்தலைமையகம் மீளமைப்பு செய்யப்பட்டுள்ளது(JOC/OPSHQMOD என்பதுவே நடவடிக்கைகளுக்கான இறுதித் தீர்மானம் எடுக்கும் பொறுப்பிலிருந்தது பெரிய தாக்குதல் நடவடிக்கைகளுக்கு திட்டமிடுகின்ற வடக்கிலும் கிழக்கிலும் பணிபுரியும் இராணுவத்தளபதிகள் தமது திட்டங்களைச் சமர்ப்பித்து அங்கீகாரத்தையும்தேவையான வளங்களையும் பெற்றுக் கொள்வர். வடக்கில் மேஜர்

வந்தனர். இதேவேளை கூட்டு நடவடிக்கைகளுக்காக அநுராதபுரத்தில் அமைக்கப்பட்ட அலுவலகம் ஒன்றில் பல்வேறு படைப்பிரிவுகளையும் சேர்ந்த அதிகாரிகள் நியமிக்கப்பட்டு படையினரின் கூட்டுச் செயற்பாடு மேலும் வலுமிக்கதாக்கப்பட்டது. எல்லா பெரிய நடவடிக்கைகளின் போதும் விமானப்படை அதிகாரிகள் இராணுவத்துடன் இணைந்து காயமுற்றவர்களை காப்பாற்றவும் மீள் விநியோகிக்கவும் செயலாற்றி வருகின்றனர். இதேபோல கடற்படையின் உதவி தேவைப்படும் இடத்து கடற்படை அதிகாரிகள் படகுகளிலிருந்து நடவடிக்கைகளை ஒருங்கிணைத்துகூட்டுச் செயற்பாடுகளில் உதவுவர்.

கூட்டுப்படைத் தலைமையகத்தின் பொறுப்பிலிருந்து விடுபட்டு முப்படைகளின் தளபதிகளுக்கும் அதிகாரமளிக்கப்பட்டுள்ளமையானது கூட்டுப்படை தலைமையகத்தின் செயற்பாடு குறித்துக் கேள்வியை எழுப்புகின்றது. கூட்டுப்படைத் தலைமையகத்தின்தேவையை எவரும் மறுக்க முடியாது. ஆனால் கூட்டுப் படைத்தலைமையகம்இதிலும் பார்க்க திறம்பட செயலாற்றியிருக்க முடியும் என்று ஜனாதிபதி பிரேமதாசா கருதியமையினாலேயே இந்த மாற்றங்கள் செய்யப்பட்டிருப்பதாக விமர்சகர்கள் கூறுகின்றனர். அத்துடன் முப்படைத் தளபதிகளுக்கும் பூரண சுதந்திரம் அளிக்கப்பட்டு அவர்களிடமிருந்து சிறந்த பயன் எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிகின்றது.

உதாரணமாக கிழக்குமாகாணத்தில் விடுதலைப்புலிகள் ஒடுக்கப்பட்டுவிட்டதாக திரும்பத்திரும்ப கூறப்பட்ட போதிலும் புலிகள் இப்போதும் தாக்குதல் நடத்தக் கூடியவர்களாக இருப்பது தெரிகின்றது. பெருமளவில் படையினர் உயிரிழப்பு உட்படக் கூடிய வகையில் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றது. அதேபோல் இதோ யாழ்ப்பாணத்தினுள் புகுந்து விட்டோம்என்று இராணுவத்தினர் கூறத் தொடங்கிஇரண்டு ஆண்டுகள் கடந்து விட்டதையும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

### ஆலோசகர் நிலை

பிரதான தளபதி என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. நான்கு நட்சத்திரப் பதக்கங்களைக் கொண்டிருக்கும் ஜெனரல் ஹமில்டன் வணசிங்காவே இராணுவ அதிகாரிகளில் மூப்பு வாய்ந்தவர் எனக் கடந்த வாரம் செய்தியாளர் மாநாட்டில் சுட்டிக் காட்டிய அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியின் வழிகாட்டுதல் படியே அவர் செயற்படுவதாகவும் கூறியுள்ளார்.

இராணுவ அமைப்பில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள் அதிகாரிகளுக்கிடையிலான அனுபவங்களுக்கும் தேவைகளுக்கும் ஏற்ப மாற்றத்தை வேண்டி நிற்பதாகவும், அனுபவம் வாய்ந்த அதிகாரிகள் போர்க்களத்திற்கு தேவைப்படுவதாகவும் தெரிவிக்கின்றார். எனினும் போர் நடத்தப்படும் முறையில் படையினருக்கிடையே முரண்பாடுகள் இருந்ததாக ஏற்றுக் கொண்ட அமைச்சர் ரணில் இதனால் முன்னர் வழங்கப்படாதிருந்த அதிகாரங்களும் கூட தற்போது முப்படைத்தளபதிகளிடம் வழங்கப்பட்டிருப்பதாக கூறுகின்றார்.

இதுவரையில் கூட்டுப்படைகளின் பொறுப்பதிகாரிகளிடமே எல்லாப் படையினரதும் வளங்களினதும், கட்டுப்பாடுகள் விடப்பட்டிருந்தன. இதன் மூலம் கூட்டுப்படைகளிடையே இணக்கம் பேணப்பட்டு வந்ததுடன், போர் முனையில் வெற்றி பெறுவதற்காக சகல தரப்பு படையினரையும் ஒருங்கிணைக்கப்பட்டும் வந்தது.

முப்படைத் தளபதிகளும் கூட்டுப்படைகளின் பொறுப்பதிகாரியின் கீழ் செயற்பட்டு வந்தனர்.

இப்போது திட்டமிடவும் செயற்படுத்தவும் இராணுவத்தினர் மற்றும் படையினருக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 77,000 பேரைக் கொண்ட இராணுவத்தின் தளபதியான ஜெனரல் சிசில் வைத்தியரட்னா சக்தி மிகுந்த மனிதராக பரிணமித்துள்ளார்.

லெப். ஜெனரல்சிசில் வைத்தியரட்ணா இராணுவத்தளபதியாக பதவி உயர்த்தப்பட்டுள்ளார். மூன்றாண்டுகள் ஒரே அந்தஸ்தில் தொடர்ந்து நீடிக்கும் அதிகாரிகள் ஓய்வு

ஆனால் ஜெனரல் வணசிங்கா கூட்டுப்படைகளின் தளபதியாக நியமனம் செய்யப்பட்டமையால் இராணுவத் தளபதியாக சிசில் வைத்தியரட்ணா வரமுடிந்தது. எனினும் இதே மூன்றாண்டுக் கொள்கை பின்பற்றப்படுமானால் மேலும் சில மேஜர் ஜெனரல்கள்பதவி விலக நேரிடலாம். இதன்படி தற்போது இருக்கும் ஐந்து மேஜர் ஜெனரல்களில்நால்வர் இவ்வருட இறுதிக்குள்இளைப்பாற வேண்டிவரும். எப்படியாயினும்இராணுவத்தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் ஸ்ரான்லி. டி. சில்வா இளைப்பாறவுள்ளார். அவர் எதிர்வரும் ஜூன் மாதத்தில் தனது மூன்றாண்டு காலத்தைப் பூர்த்தி செய்வதுடன் ஆகஸ்டில் 55 வயதைப் பூர்த்தி செய்யவுள்ளார்.

அதிகாரிகள் தரத்தில் இருக்கும் எவரும் 55 வயதின் பின்பும் சேவையில் நீடிப்பதற்கு ஜனாதிபதியின் அங்கீகாரமும், அக்குறிப்பிட்ட அதிகாரியின் அனுபவம், திறமை என்பனவும தேவை என்பதுடன், அவருக்குக் கீழ் பணிபுரியும் உத்தியோகத்தர்களின் பதவி உயர்வுகள் பாதிக்கப்படக் கூடாது என்பதும்முக்கியமானதாகும்.

இந்த மூன்றாவது விதி பின்பற்றப்படுமேயானால் தொண்டர் படையின் தளபதியாக இருக்கும் மேஜர் ஜெனரல் பாலரட்ணராஜா, ஜூலை மாதத்தில் இளைப்பாற நேரும். மேஜர் ஜெனரல் ஜெரிசில்வா, மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ ஆகியோரும் வருட இறுதிக்குள் இளைப்பாற நேரலாம்.

எப்படியாயினும் பதவியில் நீடிப்பது தொடர்பான இறுதித் தீர்மானத்தை எடுக்க வேண்டியவர் ஜனாதிபதியே. அனுபவம், திறமை என்பவற்றின் அடிப்படையிலும், ஒவ்வொருவரதும் சொந்த அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலும் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படலாம்.

அண்மையில் இந்த மாற்றங்களில் உயரதிகாரிகள் சம்பந்தப்பட்டிருப்பது, ஆளுமைப் போட்டிகள், நீதிமறுக்கப்பட்டதான குற்றச்சாட்டு, ஒதுக்கப்பட்டமை, பாரபட்சம்காட்டப்பட்டமை போன்ற பலகுற்றச் சாட்டுக்களை இராணுவத்தினுள் எழுப்பக் கூடும். இதன்

இலங்கைத் தமிழர்கள் 1983 ஆம் ஆண்டிற்கு முன்னரே தமிழகத்திலும், இந்தியாவின் ஏனைய பகுதிகளிலும் கல்வி கற்று வந்தனராயினும் 1983 இனக்கலவரத்துடன் லட்சக் கணக்கில் அகதிகள் சென்றபோது அவர்களுக்குரிய கல்வி வசதியை ஏற்படுத்திக் கொடுக்குமாறு அப்போதைய இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி தமிழக அரசிற்கு உத்தரவிட்டார். அப்போதைய தமிழக முதல்வர் எம். ஜி. ராமச்சந்திரனும் அமுலபடுத்தியதோடு, முழுமனதோடு மேலதிக உதவிகளையும் செய்தார். பின்னர் வந்த தி. மு. க. அரசாங்கமும் அதனைப் பராமரித்து வந்தது.

ஆனால், இன்று அ. தி. மு. க. அரசாங்கம் தமிழர் கல்வி வாய்ப்பைப் பறிப்பதன்மூலம் இலங்கைத் தமிழரை விரட்டி விடலாம் எனத் திட்டமிட்டுள்ளது இது தமிழக முதல்வரின் தனிப்பட்ட முடிவாகும் செல்வி ஜெயலலிதாவின் இந்நடவடிக்கை மனித நேய மற்றதும், சர்வதேச விதிமுறைகளை மீறுவதும் கண்டிக்கத்தக்கதுமாகும் அத்தோடு, அரசியல விவேகமற்ற செயலுமாகும்.

துறை அதிகாரிகள் பலரும் ராணுவத் தலைமையகத்திற்கு மாற்றப்பட்டுள்ளனர். தளத்தில் நிற்கும் அதிகாரிகளின் வசதிக்கேற்ப காலப்போக்கில் மேலும் சில மாற்றங்கள் கொண்டுவரப்படலாம்.

### பிரதான பங்கு

தரை, கடல், மறறும் வான் படைகளையும் பொலீஸ்படையையும் நடவடிக்கைகளில் இணைக்கும் பிரதான பணியே கூட்டுப்படைத் தலைமையகத் பெரிய தாக்குதல் நடவடிக்கைகளுக்கு திட்டமிடுகின்ற வடக்கிலும் கிழக்கிலும் பணிபுரியும் இராணுவத்தளபதிகள் தமது திட்டங்களைச் சமர்ப்பித்து அங்கீகாரத்தையும்தேவையான வளங்களையும் பெற்றுக் கொள்வர். வடக்கில் மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவும் கிழக்கில் மேஜர் ஜெனரல் ஜெரி சில்வாவும் இதற்கான பொறுப்பை ஏற்று விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டு படுகின்றது. அதேபோல்இதோ யாழ்ப்பாணத்தினுள் புகுந்து விட்டோம்என்று இராணுவத்தினர்கூறத் தொடங்கிஇரண்டு ஆண்டுகள் கடந்து விட்டதையும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

### ஆலோசகர் நிலை

கூட்டுப்படைத்தலைமையகம் தற்போது ஆலோசனை வழங்கும் முகவராக மட்டுமே செயற்படவுள்ளது. ஜனாதிபதியே முப்படைகளினதும் மனிதராக ..... வார்.

லெப். ஜெனரல்சிசில் வைத்தியரட்ணா இராணுவத்தளபதியாக பதவி உயர்த்தப்பட்டுள்ளார், மூன்றாண்டுகள் ஒரே அந்தஸ்தில் தொடர்ந்து நீடிக்கும் அதிகாரிகள் ஓய்வு பெறவேண்டும் என்ற ஒழுங்கிற்கு அமைய வணசிங்காவின் பதவிக்காலம்கடந்த நவம்பரில் நிராகரிக்கப்பட்டிருந்தால் சிசில் வைத்தியரட்ணா பதவி விலகியிருக்க வேண்டும்.

களில் உயரதிகாரிகள் சம்பந்தப்பட்டிருப்பது, ஆளுமைப் போட்டிகள், நீதிமறுக்கப்பட்டதான குற்றச்சாட்டு, ஒதுக்கப்பட்டமை, பாரபட்சம்காட்டப்பட்டமை போன்ற பலகுற்றச் சாட்டுக்களை இராணுவத்தினுள் எழுப்பக் கூடும். இதன் விளைவாக போட்டி மனப்பாங்கும், குழு வாதமும் இராணுவத்தினரிடையே தோன்றக் கூடும்,

நன்றி: ஐலண்ட், 12-04-1992

---

நான்கு ரஷ்ய இராஜதந்திரிகளை

## நாட்டைவிட்டு வெளியேற பெல்ஜிய அரசு உத்தரவு

(பிரசெல்ஸ்)

உளவுக் குற்றச் சாட்டின் பேரில் நான்குரஷ்யராஜதந்திரிகளை நாட்டை விட்டு வெளியேறுமாறு பெல்ஜியம் உத்தரவிட்டுள்ளது.

ரஷ்ய தூதரகத்தைச்சேர்ந்த இருவரும், வர்த்தகப் பிரிவைச் சேர்ந்த இருவரும் ஆகிய நால்வரே இவ்வாறு நாடு கடத்தப்படவுளராஜதந்திரிகளாவர்.

பெல்ஜியத்தின் இராணுவ, தொழில நுட்ப இரகசியங்களை அறிந்து கொள்வதில் ஜே. வி. பி. அதிகாரிகள் ஆர்வம் காட்டி வந்துள்ளனர்.

சோவியத் யூனியன் கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து ஜே. வி. பி யின் வேலைகள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தாலும், ஜே.வி பி. யின் பழைய அதிகாரிகள் இது குறித்த விடயத்தில் அக்கறையாகவே இருந்தனர் என்றும்,

பெல்ஜியத்தின் இராணுவ தொழில் நுட்ப இரகசியங்களை பெறுவதில் மிகத் தீவிரமாகவே செயல்பட்டு வந்தனர் என்றும் பெல்ஜிய உயர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேநேரம் இவர்களின் உளவு விவகாரம் அம்பலமானதைத் தொடர்ந்து பெல்ஜியத்தின் இராணுவ அதிகாரிகள் சிவில் சேவையாளர்கள் பத்திரிகையாளர் பலர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார்கள்

## பாகிஸ்தான் அரசு மீது மக்கள் கட்சி குற்றச்சாட்டு

(கராச்சி)

பாகிஸ்தானிய பிரதமர் நவாட்ஷெரீப்பின் அரசாங்கம் அரசாங்க நிதியை தவறான முறையில் கையாள்வதில் சம்பந்தப்பட்டதாக பெனாசீர் பூட்டோவின் பாகிஸ்தான் மக்கள் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது

இக் கட்சியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில இந்தக் குற்றச்சாட்டு ஒரே ரணை கட்சியினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

---

லிபியாவிற்கு எதிரான

# ஐ. நா. சபையின் தடையுத்தரவு நேற்று முதல் அமுல்

(நியூயோர்க்)

லிபியாவிற்கு எதிரான ஐ.நா. தடை உத்தரவு நேற்றுக் காலை 9 30 (இலங்கை நேரப்படி) மணிமுதல் அமுலுக்கு வந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுளளது.

இந்தத்தடை உத்தரவில் ஆயுதம் மற்றும் விமானப் போக்குவரத்து தடைகளும் அடங்கும் எனவும் தெரிவிக்கப் படுகிறது

ஸ்கொட்லந்தில் லொக்கர்பீக் உயரே 1 88 ஆம் ஆண்டு பான் எம் விமானம் ஒன்று குண்டு வைத்துத் தகர்க்கப் பட்டதில் குற்றவாளிகள் என ப்படும் இரண்டு லிபிய நாட்டவரை அமெரிக்காவிடமோ பிரித்தானியாவிடமோ ஒப்படைக்கத் தவறிவிட்டதற்காக ஐ நா.பதுகாப்புசபை இந்தத் தடை உத்தரவை விதித்ததாம்.

ஐ நா.தீர்மானத்திற்குதிரிப்போலியை இணங்க வைக்கும் முயற்சி எடுக்க வேண்டுமென ஐ நா.சபைக்கான பிரித்தானியத் தூதுவர் கேட்டுள்ளார்.

## அரபு லீக்கின் கோரிக்கை பாது. சபையால் நிராகரிப்பு

(நியூயோர்க்)

1988 ஆம் ஆண்டில் லொக்கர் பீக் விமானமொன்று குண்டு வெடித்து தகர்க்கப் பட்ட சம்பவம் தொடர்பாக லிபியாவிற்கு எதிரான தடை நடவடிக்கைகளை அமுலாக்குவதில் காலதாமதம் செய்வதற்கான முயற்சி ஒன்றை ஐ.நா பாதுகாப்புச்சபைநிராகரித்துவிட்டது.

விமானக் குண்டு வெடிப்புச் சம்பவத்தில், சம்பந்தப்பட்டிருந்ததாய் சந்தேகிக்கப்படும் இரண்டு லிபிய பிரஜைகளையும் மோல்ராவில் விசாரணை செய்யப்படுவதற்கு அனுமதி அளிக்குமாறு கோரி அரபுலீக் ஐ நா.பாதுகாப்புச் சபையிடம் வேண்டுகோள் விடுத்திருந்தது.

ஆனால் அமெரிக்காவும், பிரித்தானியாவும் முன்னரே மறுத்திருந்தன.

நாகொர்னோ - காராபாக்கின்

## அதிபர் மித்ரொய்யான் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலி

(மொஸ்கோ)

நாகொர்னோ - காராபாக்கின் அதிபர் ஆர்சர்மித்ரொய்யான் துப்பாககிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

34 வயதானமித்ரொய்யான் அடையாளம் தெரியாத ஆட்கள் சிலரால் அவரது வீட்டில் சுட்டுக்கொல்லப்பட்டார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஆர்மேனியர்கள், பெரும் எண்ணிக்கையில் வசிக்கும் அசர்பைசான் மாவட்டத்தில் சுயநிர்வாக ஆட்சி தொடர்பாய் நான்கு வருட காலமாக இடம் பெற்று வரும் சண்டையில் 1500க்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்;

---

## ஊர்வலங்கள் குறித்து விரைவில் சட்டமூலம்

### -தமிழக முதலமைச்சர் அறிவிப்பு

(சென்னை)

அரசியல் கட்சிகள் ஒழுங்கு செய்யும் ஊர்வலங்களின் போது பொதுச்சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்டால் அதற்கு அக்கட்சிகளின் தலைவர்களை பொறுப்பாக்கி அவர்களிடம் இருந்து நட்டஈட்டைப் பெறுவதற்கேதுவான சட்டமூலம் ஒன்றுவிரைவில் கொண்டுவரப்படும் என தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா சட்டசபையில் அறிவித்துள்ளார்.

போக்குவரத்து அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான விவாதத்திற்கு பதிலளித்துப் பேசிய கே.ஏ. செங்கோட்டையன் பாட்டாளி மக்கள் கட்சியினரின் கிளர்ச்சிகளின் போது இருபத்தியாறு பஸ்கள் தீயிடப்பட்டன 562 பஸ்கள் சேதமாக்கப்பட்டன என்று கூறிய பேதே ஜெயலலிதா குறுக்கிட்டு இதனைத் தெரிவித்தார்.

கட்சித்தலைவர்களின் தூண்டுதலின் பேரில் தான் தொண்டர்கள் பொதுச்சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கிறார்கள் என அரசாங்கம் நம்புகிறது என்று முதலமைச்சர் கூறியபோது பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர் பண்ருட்டி ராமச்சந்திரன் குறுக்கிட்டுப்பேசினார்.

"முதலமைச்சரின் நடவடிக்கை விரோதமானது. தொண்டர்களின் செயல்களுக்காக கட்சித்தலைவர்களை எவ்வாறு பொறுப்பாக்க முடியும். தி.மு.க விலிருந்து எம். ஜி. ஆர் வெளியேற்றப்பட்டபோது பல சம்பவங்கள் இடம் பெற்றன. அவற்றுக்கு எம்.ஜி. ஆரைப் பொறுப்பாக்க முடியுமா? என்று ராமச்சந்திரன் வினாவினார்.

இதற்கு விளக்கமளித்தஜெயலலிதா "இது ஒரு பொருத்தமற்ற ஒப்பீடு என்றும், எம் ஜி. ஆர், தி. மு. க. வில் இருந்து வெளியேற்றப்பட்டபோது மக்கள் தாமாகவே கிளர்ச்சிகளில் ஈடுபட்டனர். அப்போது எம் ஜி ஆர் தனிமனிதர். அவருக்கு என்றுஒருகட்சி இருக்கவில்லை. எம் ஜி.ஆருக்கு தவறிழைக்கப்பட்டதை தாங்கமுடியாமல் பொதுமக்கள் கிளர்ச்சியில் இறங்கியதன் விளைவே அந்தச்சம்பவங்கள்" என்றும் தெரிவித்தார்.

## லிபியாவுக்கு எதிராக சர்வதேச நீதி மன்றம் தீர்ப்பு

(ஜெனிவா)

லொக்கர்பீட் விமானக் குண்டு வெடிப்பு சம்பந்தமாக லிபியா தாக்கல் செய்த வழக்கில் சர்வதேச நீதிமன்றம் லிபியாவுக்கு எதிராகக் தீர்ப்பு வழங்கியுள்ளது.

ஈழநாதம்

# காங்கிரஸ் பொரு. கொள்கைகளுக்கு திருப்பதி மாநாடு அங்கீகாரம்

(திருப்பதி)

இந்திரா காங்கிரஸ் கட்சி அரசின் பொருளாதாரக் கொள்கை உலக வங்கியினாலோ, சர்வதேச நிதி நிறுவனத்தினாலோ தீர்மானிக்கப்படவில்லை என்று பொருளாதாரத் தீர்மானத்தை விவாதக் குழுவில் முன்மொழிந்து டேசிய திட்ட ஆணைக் குழுத் துறைத் தலைவர் பிரணாப் முக்கர்ஜி திருப்பதி காங்கிரஸ் மகாநாட டில் கூறினார்.

இந்திய வுக்கு உதவும் சர்வதேச நிதி நிறுவனங்கள் பொருளாதார நிதி அளிப்பதற்கும் வர்த்தகம் தொடர்பான விஷயங்களிலும், பொருளாதாரத்துக்குச் சம்பந்தம் இல்லாத காரியங்களிலும் நிபந்தனைகளை விதிப்பது பற்றி திருப்பதி மகாநாட்டில் இந்திரா காங்கிரஸ் கட்சி கவலை தெரிவித்துள்ளது.

மேலும், இத்தகைய போக்கு புதிய சர்வதேச முறைமை ஒன்று உருவாகுவதற்கு உதவியாக இராது என்று காங்கிரஸ் மகாநாட்டில் விவாதக் குழுவில் பரிசீலனைக்கு வைக்கபபட்ட சர்வதேச நிலைமை பற்றிய நகல் தீர்மானம் கூறுகின்றது.

சர்வதேச அரங்கில் கெடுபிடி யுத்தம் முடிவடைந்து, எதிரும் புதிருமான இராணுவ கூட்டமைப்புக்களில் ஒன்று உடைந்து போய்விட்ட சூழ்நிலையில், உலக நாடுகளுக்குப் புதிய வாய்ப்புகளும், அதே சமயத்தில் புதிய அபாயங்களும் ஏற்பட்டுள்ளன என்றும் மேற்படி தீர்மானம் கூறுகின்றது.

அணுவாயுதங்கள் தேவையில்லாது போன சூழ்நிலையில், அதை ஏலவே தயாரித்து வைத்துள்ள அரசுகள் அந்த ஆயுதங்களைத் தொடர்ந்து வைத்திருக்க முயல்வது, அணுவாயுதமற்ற இந்தியாவின் கொள்கைக்கு முரணானது என்று ஒரு தீர்மானம் குறிப்பிடுகின்றது.

திருப்பதி காங்கிரஸ் மகாநாட்டில் சிறிலங்கா உட்பட 26 நாடுகளின் பிரதிநிதிகள் பார்வையாளர்களாகக் கலந்து கொள்கிறார்கள். முதல் முறையக ஜப்பானியப் பிரதமர் உயர்மட்டக்குழு ஒன்றை இம் மகாநாட்டில் பார்வையாளர்களாகக் கலந்து கொள்ள அனுப்பியுள்ளது.

இந்தியாவில் பயங்கரவாதத்துக்கு பாகிஸ்தான் தொடர்ந்து ஆதரவு அளித்து வருவதாவும், அணுவாயுத படை சாதனப் பாதையை அது பின்பற்றி வருவதாகவும், இந்திய-பாகிஸ்தான் உறவுகளில் ராஜீவ் காந்தியினால் புகுத்தப்பட்ட உணர்வு குறைந்து போய்விட்டதாகக் கூறிப் பக்கத்து நாடுகளுடனான உறவுகளைப் பரிசீலிக்கும் தீர்மான வாசகத்தில் ஆழ்ந்த கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனா, நேப்பாளம் மற்றும் தெற்காசிய நாடுகளுடன் உறவுகள் மேம்பட்டுள்ளதை கட்சி வரவேற்றுளது இஸ்ரேலுடன் முழு அளவிலான ராஜரீகத் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதான அரசின் முடிவை மாநாடு ஆதரித்துள்ளது. ஆப்கனிஸ்தான் மண்டல சார்பற்ற நாடாகவே உருவெடுக்கும் என்று மாநாடு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

ஜனநாயக லட்சியம், சுதந்திரம், தனி மனித கௌரவம் ஆகியலட்சியங்களைத் பேணிப் பராமரிப்பதை இந்தியாவும், அமெரிக்காவும் பகிர்ந்து கொள்வதென்றும், சோவியத் ரஷ்யாவிலிருந்து உடைந்து போன குடியரசுகளுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதென்றும் அரசியல் நகல் தீர்மானம் மேலும் தெரிவிக்கின்றது.

## பெற்றுக் கொள்ளவும்

[யாழ்ப்பாணம்]

வவுனியாவில் விடுதலைப் புலிகள் சோதனை முகாமின் அருகிலிருந்து பொருள்கள் அடங்கிய சிறு பெட்டி ஒன்று கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர்கள் ஆதாரங்காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

## யாழ். மேலதிக அரச அதிபர் திருமலைக்கு இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திடீர் இடமாற்றம் செய்யபட்டிருக்கிறார்.

தற்போது இம் மாவட்டத்தில் கடமையாற்றி வரும் மேலதிக அரசாங்க அதிபரான திரு சண்முகநாதனுக்கு இத் திடீர் இடமாற்றத்திற்கான கடிதம் கிடைத்திருக்கிறது

இம்மாதம் முதலாம் திகதியில் இருந்து இவ் இடமாற்றம் வழங்கப்பட்டிருப்பதாக இக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

திருக்கோணமலையில் உள்ள வடக்குக் கிழக்கு மாகாணசபைச் செயலகத்திற்கே இவ் இடமாற்றம் செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிய வருகிறது. (க)

272-ம் நாள் நினைவஞ்சலி



## ஆரம்ப சுகாதாரப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யுனிசெவ் உதவியுடன் யாழ். மாநகராட்சி மன்றப் பிரதேசத்திலுள்ள பலர் பாடசாலை ஆசிரியர்களுக்கு ஆரம்ப சுகாதார பராமரிப்பு என்னும் விடயத்தில் வரும் 20 ஆம் திகதி தொடக்கம் ஆறு நாட்களுக்குப் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

இப் பயிற்சியில் பங்குபற்ற விண்ணப்பித்தோர் வரும் 20 ஆம் திகதி காலை 8 30 மணிக்கு யாழ். சுகாதார வைத்திய பணிமனையில் சமுகமளிக்குமாறு யாழ் சுகாதார வைத்திய அதிகாரியின் செய்திக் குறிப்பொன்று கேட்டுக் கொள்கின்றது.

வடக்கு-கிழக்கு

## மாகாணங்களுக்கிடையில் ஆசிரியர் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

வட-கிழக்குமாகாணங்களுக்கிடையில் ஆசிரியர் அதிபர்கள், இடமாற்றம் இடம்பெறவுள்ளது. மாகாணங்களுக்கிடையில் இடமாற்றம்பெறவிரு ம்பும் தகுதி வாய்ந்த ஆசிரியர்களினதும், அதிபர்களினதும் விண்ணப்பங்களை ஏற்று கீழ் கண்ட நடவடிக்கைகளைஎடுக்குமாறு வட-கிழக்கு மாகாண திட்ட மீளாய்வு கல்விப் பணிப்பாளர் எஸ் எஸ் மனோகரன் பிரதேசக் கல்விப் பணிப்பாளர்களுக்குத் தெரியப்படுத்தியுள்ளார்.

பதில் ஒழுங்குகள் இன்றி விடுவிக்கக் கூடியவர்களின் விண்ணப்பங்களை மேல் நடவடிக்கைகளுக்காக அனுப்புதல் வேண்டும் என்றும்,

குறிப்பிட்ட தகைமைகள் கொண்டிருந்தும் பதில் ஆசிரியர்களின்றி விடுவிக்கமுடியாதவர்களின் பட்டியல் ஒன்றை வேறாகத் தயாரித்து விண்ணப்பங்களுடன் அனுப்ப வேண்டும் என்றும் பணிக்கப்பட்டுள்ளது.

கோட்டங்களிலிருந்தும், மாவட்டங்களில் இருந்தும் ஆசிரிய இடமாற்றம் தொடர்பாக அடிக்கடி விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பது கவலைக்குரிய விடயமாகும் என்றும் சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சம்பளம் வழங்குவதில் கல்வி. திணை. பாரபட்சம்

(யாழ்ப்பாணம்)

அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்கப்படுவதில் கல்வித் திணைக்களம் புறக்கணிப்பு செய்வதாக நேற்று நடைபெற்ற தமிழர் ஆசிரியர்சங்கயாழ் மாவட்டக் கூட்டத்தில் சுட்டிக் காட்டப் பட்டது

யாழ் மாவட்ட கிளைத் தலைவர்எஸ். தாசீசியஸ் தலைமையில் நேற்று புனிதமரியாள் கல்லூரி மண்டபத்தில் நடந்த கூட்டத்தில் இது தெரிவிக்கப் பட்டது. இது பற்றி மேலும் தெரியவருவதாவது;

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு அரசாங்க ஊழியர்கள் அனைவருக்கும் ஏப்பிரல் ஒன்பதாம் திகதிக்கு முன்பாக சம்பளம்வழங்கப்படவேண்டும் என்றுபொதுநிர்வாகஅமைச்சு சுற்று நிருபம் ஒன்றில் அறி

இவ் அறிவிப்பின் பிரகாரம் யாழ். கல்வித் திணைக்களம், அதிபர், ஆசிரியர் தவிர்ந்த அதிகாரிகள், லிகிதர்கள், சிற்றூழியர்கள் அனைவருக்கும் ஏழாம் திகதியன்றே சம்பளம் வழங்கப்பட்டுள்ளது. எனினும் அதிபர், ஆசிரியர்களின் சம்பளம் குறித்ததிகதிக்கு முன்பாக வழங்கப் பட்டிருக்கவில்லை எனத் தெரிகிறது.

சமாதான

கணித்து விட்டு சிறிலங்கா அரசானது மணலாற்றிலும், மட்டக்களப்பிலும், திருக்கோணமலை மற்றும் வன்னியிலும் பாரிய இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து செய்கிறது. இந்த இராணுவ நடவடிக்கைகள் சிங்களப்படைகளுக்கு வெற்றியைக் தேடித்

மண்டூரில் ஏழு

பட்டோரின் அடையாள அட்டைகளை எடுத்துச் செல்லும் இராணுவத்தினர் சடலங்களைப் பற்றைக்குள் வீசிச் செல்வதாகவும் தெரிகிறது.

இராணுவம்

ணுவத்தினர் இத்தேடுதல் வேட்டையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். நேற்று முன்தினம் வரையான தேடுதல் வேட்

நெருக்கடியின் மத்தியிலும்

## தமிழீழ பொருளாதார அமைப்பு உருப்பெற்று வளர்ந்து வருகிறது

— தமிழீழ ஆய்வு நிறுவன பொறுப்பாளர்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ ஆய்வு நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட வதிவிட வேளாண்மைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா நேற்று மாவலை கோண்டாவில் கலைவாணி விளையாட்டு மைதானத்தில்கோலாகலமாக நடைபெற்றது.

விவசாயிகள், விவசாயத் திணைக்களஅதிகாரிகள், விதலைப்புலிகள் மக்கள் முன்னணி உட்பட பல நூற்றுக்கணக்கான மக்கள் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.

அணிவகுப்பு நிகழ்ச்சியுடன் ஆரம்பமான இவ்விழாவிற்கு யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி தலைமை தாங்கினார் இவரது தலைமை உரையைத் தொடர்ந்து தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் பொறுப்புாளர் திரு. ரவி அவர்கள் உரை நிகழ்த்தினார்.

இவர் தனது உரையில் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் தமிழீழத்தின் பொருளாதார அமைப்பு உருவாகி வருகிறது என்றும் இதனால் புதிய அறிவியல் தொழில்நுட்பத் துறைகளும் வளர்ச்சி கண்டு வருவதாகவும் கூறினார்.

தொடர்ந்து விடுதலைப்புலிகள் அரசியற் பிரிவுப் பிரமுகர் திரு. பாலகுமார் சிறப்புரை நிகழ்த்தும் போது இவ்விழா போட்டியில் கலந்துகொண்டவர்களுக்கும் ஏனைய விவசாயிகளுக்கும் நன்றி தெரிவிக்கின்ற விழா மட்டுமல்ல மண்ணை அறிந்து மண்ணை மனதார நேசிக்கும் மக்களது விழாவாகும் என்றார்.

தொடர்ந்து போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

அன்னை பூபதி நினைவு

## நல்லூர் கூட்டத்தில் பெருமளவில் மக்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட சனசமூக நிலையங்கள் அன்னை பூபதியின் நினைவு நாள் நிகழ்ச்சிகளாக மாபெரும் பொதுக் கூட்டத்தினையும் விடுதலை உணர்வூட்டும் கலை நிகழ்ச்சிகளையும் நேற்று மாலை 5-45 மணி தொடக்கம் நல்லூர் வடக்கு வீதியில் மிகவும்சிறப்பாக நடைபெற்றது

பெருமளவில் மக்கள் கலந்து கொண்ட பொதுக் கூட்டத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் மக்களுறவுக் கொள்கை முன்னெடுப்புப் பிரிவுப் பொறுப்பாளர் திரு பரா யாழ். மாவட்ட உதவி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு தங்கன் விடுதலைப்புலிகளின் செஞ்சோலை பொறுப்பாளர் செல்வி ஜனனி, திரு. பொன். பூலோகசிங்கம் ஆகியோர் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து கவியரங்கம் எழுச்சிப்பாடல்கள், நாட்டுக்கூத்து, நாடகம் போன்ற கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இந் நிகழ்ச்சிகளை கண்டுகளிக்க பெருந்திரளான மக்கள் வந்திருந்தனர்.

## 'விடுதலைப் புலிகள்' வெளிவந்துவிட்டது

விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வ பத்திரிகையான விடுதலைப் புலிகள் இதழின் பங்குனி சித்திரை மாத வெளியீடு வெளிவந்து விட்டது. இவ் இதழில் தலைவர் பிரபாகரன் அண்மையில் பெண் விடுதலை தொடர்பாக வெளியிட்ட அறிக்கை விரிவாக விளக்கப்பட்டுள்ளது. அத்துடன் "மணலாறு சிங்களப் படைக்கு புதைகுழியாகட்டும்" "விடுதலைப்புலிகளின் கடற்புலிகள்" "தேசத்துரோகமும் மரணதண்டனையும்" என்னும் தலைப்பிலான கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. மேலும் தீர்வை முன்வைப்பது யார்? விடுதலைப் புலிகளா? அரசா? என்னும் ஆசிரியர் தலையங்கமும் அமைந்துள்ளது. பன்னிரெண்டு பக்கங்கள் கொண்ட இவ் இதழின் விலை எட்டு ரூபாவாகக் குறைக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆப்கான்

ன்றை நடத்தியுள்ளதாகவும் சோவியத்தின் எல்லைப் பகுதியிலிருக்கும் இரண்டு பிரதான நகரங்களை இளர்ச்சியாளர்கள் கைப்பற்றியதாகவும், சண்டைகள் தொடர்ந்து நடைபெறுவதாகவும் செய்திகள் கூறுகின்றன.

## 272-ம் நாள் நினைவஞ்சலி



### வீரவேங்கை நவீனன்
**[திருலோகசிங்கம் அன்பழகன்]**

| | |
|---|---|
| தாயின் மடியில் | தாயக மண்ணில் |
| 28-11-74 | 14-07-91 |

தாயக விடியலின் தன்னுயிர் தந்திடும்
தியாக வேங்கைகள் வரிசையில் - நீயும்
நவீனன் என நினைவில் நிலைத்து
மாவீரனாய் வாழ்வாய் மண்மீது

தற்போதைய முகவரி; 5-ம் கட்டை கட்டுடை,
மானிப்பாய்

முன்னைய முகவரி: கனகசபைத் தோட்டம்
கீரிமலைவீதி, காங்கேசன்துறை

(சி/4270) -நண்பர்கள்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 16ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

மலை மற்றும் வன்னியிலும் பாரிய இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து செய்கிறது. இந்த இராணுவ நடவடிக்கைகள் சிங்களப்படைகளுக்கு வெற்றியைத் தேடிக் கொடுக்கின்றனவா என்றால் அதுவுமில்லை.

இவை ஒரு புறமிருக்க கடந்த ஐந்து மாதங்களாக எ து இ கம் பிரயோகித்து வரும் புதிய தந்திரோபாயம் காரணமாக சிறிலங்காப் படையினருக்குப் பாரிய இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன என்பது உலகறிந்த விடயம். அவ்விழப்புக்கள் காரணமாக இராணுவத்தினர் மத்தியில் விரக்தியும் பீதியும் ஏற்பட்டுள்ளதுடன் ஆயிரக்கணக்கில் இராணுவத்தை விட்டு ஓடுகின்றனர் எனவும் கொழும்புப் பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.

ஆனாலும், இராணுவ இயந்திரத்தில் பாரிய நிர்வாக மாற்றங்களைச் செய்து, இராணுவத்தை மீளமைத்து அவர்களைப் போருக்கு ஏவிவிடவே அரசு முயல்கின்றது. அத்தோடு இராணுவத்துடன் இணைந்துசெயற்படும் தமிழ்க் குழுக்களையும் ஒருங்கு திரட்டி போரை எப்படித் தொடர்வது. போரில் இக்குழுக்களின் பங்கு என்ன என்பது பற்றியும், சிறிலங்காவின் படைத்துறைத் தலைமைகள் சதியாலோசனை செய்கின்றன.

இவற்றையெல்லாம் ஒப்பு நோக்கிப்பார்க்கும்போது சமாதான முயற்சிகளுக்கான கதவை அடைத்து வைத்து விட்டு தொடர்ந்தும் போரை நடத்தவே சிறிலங்கா அரசு எண்ணங் கொண்டிருப்பது துலம்பரமாகப் புலனாகின்றது

கள் அனைவருக்கும் ஏப்பிரல் ஒன்பதாம் திகதிக்கு முன்பாக சம்பளம்வழங்கப்படவேண்டும் என்றுபொதுநிர்வாகஅமைச்சு சுற்று நிருபம் ஒன்றில் அறிவித்து இருந்தது.

### உணவுச்சாலை

உணவுச்சாலைகளில் பார்வைக்காக வைக்கப்படல் வேண்டும் என்றும் அனைத்து உணவுச்சாலை உரிமையாளர்களும் பணிக்கப்பட்டிருக்கின்றனர்.

### இராணுவம்

ணுவத்தினர் இத்தேடுதல் வேட்டையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். நேற்று முன்தினம் வரையான தேடுதல் வேட்டையில் பலர் இராணுவத்தினரின் கடும் சித்திரவதைக்கு இலக்காகியுள்ளனர். பத்துக்கும் அதிகமான தமிழ் மக்கள் கைது செய்யப்பட்டதாகவும், சமூக விரோத சக்திகளும் அவர்களுக்கு துணை போவதாகவும் நம்பகரமாகத் தெரிய வருகிறது.

### புலிகளை

மகாநாட்டின் தலைவராக பிரதமர் பி. வி. நரசிம்மராவ் செய்தியாளர் மத்தியில் பேசுகையில் புலிகள் இயக்கத்தைத் தடை செய்ய தமிழ் நாடு இந்திரா காங்கிரஸ் கேட்டுள்ளது என்றும் தடை குறித்துத் தமது அரசு பரிசீலித்து வருகிறது என்றும் கூறினார். ஆனாலும் இறுதித் தீர்மானம் எதையும் அரசு மேற் கொள்ளவில்லை என்றும் குறிப்பிட்டார்.

நகரங்களை இளர்ச்சியாளர்கள் கைப்பற்றியதாகவும், சண்டைகள் தொடர்ந்து நடைபெறுவதாகவும் செய்திகள் கூறுகின்றன.

### மண்டூரில்

தில் சமூக விரோதி ஒருவரும் அவர்களது ஆதரவாளர் ஒருவரும் கொல்லப்பட்டனர். இவர்களிடமிருந்து ரி-56 ரகத் துப்பாக்கியொன்றும் அதற்குரிய ரவைக்கூடு ஒன்றும், இருபத்தைந்து ரவைகளும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது ஏனையோர் முகாமிற்கு தப்பியோடியுள்ளனர்.

### தீர்வை

கொள்ளப் போவதில்லை அப்படியானால் ஈற்றுத் தீர்வே அவர்களது கடப்பாடாகும். அப்படி வைக்கப்படும் மாற்றுத்தீர்வு தமிழீழ மக்களால் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதா என்பதை விடுதலைப் புலிகள் பரிசீலனை செய்யத் தயார் இதுதான் விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ளது. பன்னிரெண்டு பக்கங்கள் கொண்ட இவ் இதழின் விலை எட்டு ரூபாவாகக் குறைக்கப் பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

### அம்பாறை

புலனாய்வு அறிக்கைகளின் தகவல்படி இருபத்துநான்கு மணி நேரத்துக்குள் தொடர்புடைய ஆறு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிசார் கூறுகின்றனர். கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மட்டக்களப்பு பிரதேச அமைப்பாளர் ஆவார்.

வளவாஞ்சிக்குடியிலிருந்துபுறப்பட்ட பஸ் வண்டியில் வெடிகுண்டுகளைப் பொருத்திய விடுதலைப் புலிகள் அம்பாறையில் அது வெடிப்பதற்குசிலவினாடிகள் முன்பாக சாரதி நடத்தினர் ஆகியோருடன் சேர்ந்து தலை மறைவாகிய தாகவும் பின்னர் மகரகம நோக்கிச் சென்று அங்கும் கார்க்குண்டை வெடிக்க வைத்ததாகவும் பொலிசார் கருதுகின்றனர்.


## உங்கள் படப்பிடிப்பு தேவைகளை
நிறைவு செய்யும்

**இளந்தென்றல்**

**ஓராண்டை** இன்று நிறைவு செய்துள்ளது

அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள் நலன்விரும்பிகள்
அனைவருக்கும் நன்றி நவில்கிறது

**இளந்தென்றல் படப்பிடிப்பாளர்**

14, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (சி/4269)


## மரண அறிவித்தல்
### சுப்பிரமணியம் பாலசுப்பிரமணியம்

(முன்னாள் நகரசபைத் தலைவர் சாவகச்சேரி)

சுப்பிரமணியம் பாலசுப்பிரமணியம்காலமானார். இவர் இராசலட்சுமியின் அன்புக் கணவரும், குகதாசன் (பாபு) விற்பனைத் திணைக்களம், சிறிஸ்கந்தராசா (ஜேர்மனி), கற்பகவல்லி (ஜேர்மனி), றஞ்சினி (ஜேர்மனி), குகநேசன் (சாவகச்சேரி), மோகனதாஸ் (கனடா), சகலகலா வல்லி, பேரின்பதாஸ் (அப்பு), கிறிஸ்ன தாசன் (ஜேர்மனி), கலை வாணி, குகலோகநாதன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், குணமணி, அருந்தவ நாயகி, பேரின்ப நாயகம், இந்திரதாஸ், கலைமகள், மொனிக்கா (ஜேர்மனி), விமலேந்திரன் நந்தாவதி ஆகியோரின் மாமனாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரிகைகள் 16-04-92 (இன்று) கண்ணாடிப்பிட்டி மயானத்தில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

பாலா வீதி,
சாவகச்சேரி.

தகவல்
பாபு (மகன்)

(2473)